RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023 - 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 201 ஜுலை.27 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# உலக நாடுகளின் நம்பகமான பாதுகாப்பு கூட்டாளி இந்தியா : பிரதமர் மோடி பெருமிதம்

**புதுடெல்லி: ஜூலை.27–**

பாதுகாப்புத் துறையில் உலக நாடுகளின் நம்பகமான கூட்டாளியாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் தளவாட உற்பத்தி, ராணுவ ஏற்றுமதி மற்றும் நட்பு நாடுகளுடனான கூட்டுறவு ஆகியவற்றில் இந்தியா தொடர்ந்து புதிய உச்சங்களைத் தொட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் மோடி, தனது மாதாந்திர வானொலி நிகழ்ச்சியான 'மன் கி பாத்' மூலம் நாட்டு மக்களுக்கு நேற்று உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், "1999ஆம் ஆண்டு கார்கில் போரின்போது நாட்டின் எல்லையைக் காக்க உயிர்த்தியாகம் செய்த இந்திய வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறேன்.

இன்று ஜூலை 26. கார்கில் வெற்றி தினம். இந்த நாள் நம்மைப் பெருமிதத்தால் நிரப்புகிறது. நமது வீரர்களின் அசாத்திய துணிச்சலை நினைவூட்டுகிறது. கார்கிலின் உயரமான சிகரங்கள், கடுமையான குளிர் மற்றும் எதிரிகளின் சவால்கள் என அனைத்து இக்கட்டான சூழ்நிலைகளையும் தாண்டி நமது வீரர்கள் சாதித்துக் காட்டினர்.

நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'ஐஎன்எஸ் மகேந்திரகிரி' போர்க்கப்பல் இந்திய கடற்படையில்



சேர்க்கப்பட்டுள்ளது. பினாகா ராக்கெட் மற்றும் குஷா ஏவுகணை சோதனைகளின் வெற்றி பாராட்டுக்குரியது.

இந்த மாத தொடக்கத்தில் இந்தோனேசியாவுடன் பிரம்மோஸ் மற்றும் அஸ்த்ரா ஏவுகணைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், இந்தியாவின் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தின் மீதான உலகளாவிய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

விண்வெளித் துறையில் தனியார் பங்களிப்பின் கீழ் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'விக்ரம்1' ராக்கெட் வெற்றிகரமாக ஏவப்பட்டது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாகும்.

மழை பெய்யும்போது, மழை நீரை சேகரிக்க வேண்டும். இதற்காக, ஜூலை 4ஆம் தேதி முதல் நாடு தழுவிய அளவிலான ஒரு சிறப்புப் பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. இந்த முன்னெடுப்பின் கீழ் மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீரை அதிகரிக்க செய்வது, பழைய நீர்நிலைகளைப் புதுப்பிப்பது, மரக்கன்றுகள் நடுவது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டுத் துறையில், ஜப்பான் ஓபன் பட்டம் வென்ற பேட்மின்டன் வீராங்கனை பி.வி.சிந்துவுக்கும், லார்ட்ஸ் மைதானத்தில் வரலாற்று வெற்றி பெற்ற இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் ஆகஸ்ட் 7ஆம் தேதி வரவிருக்கும் 'தேசிய கைத்தறி தினத்தை' முன்னிட்டு, உள்நாட்டுத் தயாரிப்புகளுக்கு ஆதரவளிக்கும் 'வோக்கல் ஃபார் லோக்கல்' (Vocal for Local) என்ற உணர்வை அனைவரும் வலுப்படுத்த வேண்டும்" என்று பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார்.

## "உதயநிதி கோமாளித்தனத்தை கைவிட வேண்டும்; அவருக்கு Gen Zனா என்னன்னு கூட தெரியல"

### அமைச்சர் நிர்மல்குமார்

சென்னை, ஜூலை.27-

சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக வெற்றிக் கழக அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் செயல்பாடுகளைக் கடுமையாக விமர்சித்துள்ளார். மேகதாது விவகாரம் மற்றும் நீட் தேர்வுப் போராட்டங்கள் குறித்து அவர் பல கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

உதயநிதி ஸ்டாலின் மற்றும் திமுகவின் சமீபத்திய நடவடிக்கைகள் குறித்து நிர்மல்குமார் கூறுகையில், "உதயநிதி தனது கோமாளித்தனமான செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். அவருக்கு 'Gen Z' என்றால் என்னவென்றே தெரியவில்லை. நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தில், இளைஞர்கள் மத்தியில்



ரூ.200 பணம் கொடுத்து 'Gen Z DMK' தொண்டர்களைத் தான் உட்கார வைத்திருந்தார்கள்."

சென்னையில் நடைபெற்ற நீட் தேர்வுக்கு எதிரான அமைதியான போராட்டத்தில் புகுந்து, திமுகவினரே திட்டமிட்டு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்தனர். 'Gen Z DMK' என ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு உதயநிதி இனிமேலும் கோமாளித்தனம் செய்யக்கூடாது. திமுகவை வழிநடத்த உதயநிதி ஸ்டாலினுக்குத் தகுதி இருக்கிறதா என்பதை அவர் சுய பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

"திமுகவிற்கு தலைமை தாங்கும் தகுதி யாருக்கு இருக்கிறது? கனிமொழிக்கா அல்லது உதயநிதிக்கா? என அக்கட்சிக்குள் ஒரு வாக்கெடுப்பு நடத்த திமுக தலைமை தயாரா?" என சவால் விடுத்தார்.

மேகதாது அணை விவகாரம் குறித்துப் பேசிய அவர், மேகதாது விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் விஜய் நிச்சயம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பார். இரு மாநிலப் பிரச்சினையை நேரில் சென்று பேச்சுவார்த்தை நடத்தினாலே சுமூகத் தீர்வு கிடைக்கும். முதலமைச்சரின் கர்நாடகப் பயணம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் முதல்வர் அலுவலகத்தில் இருந்து வெளியாகும் என்றார்.

## தமிழகத்தில் தொடங்கும் நீட் எதிர்ப்பு போராட்டம் நாடு முழுவதும் விரிவடையும்: நீட் எதிர்ப்பு கூட்டமைப்பு தகவல்

சென்னை, ஜூலை.27-

தமிழகத்தில் தொடங்கும் நீட் எதிர்ப்பு போராட்டம், நாடு முழுவதும் விரிவடையும் என்று நீட் எதிர்ப்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மணிரத்தினம் நேற்று (ஜூலை 26) தெரிவித்துள்ளார்.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் டெல்லியில் தொடர் போராட்டம் நடைபெற்றது. இதையடுத்து, நேற்று, தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில், போராட்டத்தை கைவிடுவதாக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி அறிவித்தது.

இதற்கு முன்னதாக, அக்கட்சியின் போராட்டத்திற்கு ஆதரவாகவும், நீட் தேர்வை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும் சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாலன் இல்லத்தில் இளைஞர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.



இதையடுத்து, சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நீட் எதிர்ப்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மணிரத்தினம் பேசுகையில், "நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் தமிழகத்தில் மட்டுமின்றி நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

மேலும், நீட் தேர்வால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த அனைத்து மாணவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் நீட் நடைமுறையில் இருந்தாலும், தமிழ்நாட்டின் நிலைப்பாடு நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்பதுதான். அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து, அரசிடம் உரிய அனுமதி பெற்று விரைவில் அடுத்த கட்ட போராட்டம் தொடங்கப்படும். அரசு அனுமதி வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நீட் தேர்வு ரத்து செய்யப்படும் வரை காலவரையற்ற போராட்டம் தொடரும்.

நீட் தேர்வு விவகாரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஆலோசித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்த வேண்டும். நீதிமன்றத்தை அணுகியும் சட்டப்போராட்டம் நடத்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழகத்தில் நீட் தேர்விற்கு எதிரான போராட்டம் நடைபெறவில்லையே என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "கடந்த ஐந்து ஆண்டுகளாக நீட் எதிர்ப்பு போராட்டம் நடைபெறவில்லை என்று கூற முடியாது, பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்றுதான் வந்தன.

நீட் விலக்கு மசோதாவை தமிழக சட்டமன்றம் நிறைவேற்றியிருந்தாலும், அது இன்னும் நிலுவையில் தான் உள்ளது. திமுக, அதிமுக, தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் நீட் தேர்வுக்கு எதிரான நிலைப்பாட்டில்தான் உள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி கல்வி முறைகள் தற்போது நடைமுறை உள்ள நிலையில், ஒரே மாதிரியான நுழைவுத் தேர்வை திணிப்பது மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. தமிழகத்தில் தொடங்கும் நீட் தேர்வுக்கான எதிர்ப்பு போராட்டம் விரைவில் நாடு முழுவதும் விரிவடையும்" என்று மணிரத்தினம் பதில் அளித்தார்.

## சட்டப்பேரவை கதவுகளை மூடுவதாக முதல்வர் கூறியது குறித்து உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரப்படும்

சென்னை, ஜூலை.27-

சட்டப்பேரவை கதவுகளை மூடுங்கள் என முதல்வர் கூறியது உரிமை மீறல் செயலாகும். இதை கண்டிக்கும் வகையில் கட்சி தலைமையுடன் ஆலோசித்து சட்டப்பேரவையில் உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப முடிவெடுப்போம் என்று முன்னாள் சட்டத் துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.



தமிழக முதல்வர் குறித்து அவதூறாகவும், மிரட்டும் தொனியிலும் பேசியதாக கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜீ.வி.மார்க் கண்டேயன் எம்எல்ஏவை ரகுபதி மற்றும் கட்சி நிர்வாகிகள் சந்தித்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தவெக ஆட்சியில் பேச்சுரிமை பறிக்கப்பட்டுள்ளது. வெள்ளையர் ஆட்சியில்கூட இருந்த பேச்சுரிமை விஜய் ஆட்சியில் இல்லை. அரசை விமர்சித்து சாதாரண பேச்சுவாக்கில் பேசுபவர்கள் மீதெல்லாம் பொய் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. மேலும், சட்டம் ஒழுங்கை காரணம் காட்டி வழக்குகளை முடுக்கிவிட டிஎஸ்பிக்கள் மூலம் நீதிபதிகளுக்கே சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

தவெக அரசு முழுக்க முழுக்க பாஜகவின் 'ஸ்லீப்பர் செல்லாக' இயங்குகிறது. ஜனநாயகன் திரைப்படத்தில் நான்கு அமைச்சர்கள் நடித்துள்ள சூழலில், கரூர் சம்பவத்தின்போது கண்ணீர் விடாதவர்கள் இப்போது அந்த படத்தை பார்த்துவிட்டு கண்ணீர் வடிக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளுக்கு வெளிநடப்பு செய்ய முழு உரிமை உண்டு. ஆனால், சட்டப்பேரவை கதவுகளை மூடுங்கள் என முதல்வர் கூறியது உறுப்பினர்களை சிறை வைப்பதற்கு சமமான மிகப் பெரிய ஜனநாயக உரிமை மீறலாகும். சட்டப்பேரவை தலைவர் ஒருதலைப்பட்சமாகச் செயல்பட்டு வரும் நிலையில், இதுகுறித்து கட்சி தலைமையுடன் ஆலோசித்து சட்டப்பேரவையில் உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரப்படும்.

## 76 ஆயிரம் ரூபாய் செலவு செய்து எம்.எல்.ஏ., ஆவது த.வெ.க.,வில் மட்டுமே சாத்தியம்; செங்கோட்டையன் பெருமிதம்

ஈரோடு, ஜூலை.27-

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஆகியவற்றின் சார்பில் தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இவ்வேலைவாய்ப்பு முகாமினை வருவாய் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், துணிநூல், கைத்தறித்துறை அமைச்சர் விஜய் பாலாஜி ஆகியோர் துவக்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து, முகாமில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களின் நேர்காணல் அரங்குகள் மற்றும் வழிகாட்டுதல் மையங்களை நேரில் பார்வையிட்டு இருவரும் ஆய்வு செய்தனர்.

பின்னர், அமைச்சர் செங்கோட்டையன் மற்றும் விஜய் பாலாஜி ஆகியோர் 300 நபர்களுக்கு தனியார் நிறுவனத்தின் பணி ஆணைகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில் அமைச்சர் விஜய் பாலாஜி பேசுகையில், "இன்றைய நவீன காலத்தில் சோசியல் மீடியா வளர்ச்சி அடைந்துள்ளதால், எது சரி, எது தவறு என்று ஆராயும் அறிவுத்திறன் மக்களுக்கு உள்ளது. இனி யாரும் மக்களை ஏமாற்ற முடியாது. கடந்த 70 ஆண்டு கால ஏமாற்றங்கள் போதும். எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் மற்றும் உண்பதற்குச் சோறும், வருமானத்திற்கு வேலையும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே நமது முதன்மை அரசியல் கொள்கை. படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவிக்கக் கூடாது. உங்களுக்கான வேலைவாய்ப்புகளை அரசு நிச்சயம் உருவாக்கித் தரும்" என்றார்.

அவரைத் தொடர்ந்து அமைச்சர் செங்கோட்டையன் பேசுகையில், "எம்.ஜி.ஆருடன் பயணித்த நான், இன்றைக்கு தவெக தலைவர் விஜய்யின் தலைமையில் பொறுப்பேற்று பணியாற்றி வருகிறேன். மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதே நமது நோக்கம். படித்து முடித்துவிட்டு வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக மாற்ற நாங்கள் உறுதுணையாக இருப்போம்.

ஈரோடு மாவட்டம், கோபி செட்டி பாளையத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த வேலைவாய்ப்பு முகாமில் 340க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. சுமார் 3,000க்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

தேர்தலில் பல கோடிகளை செலவு செய்து வெற்றி பெற முடியாமல் தடுமாறும் அரசியல் சூழலில், வெறும் 76,000 ரூபாய் செலவில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றுள்ளேன். இந்த வரலாற்றை தமிழக வெற்றிக் கழகத்தில் தான் நடத்திக்காட்ட முடியும்.

தமிழ்நாட்டில் வேலையின்மை என்ற நிலையே இருக்கக் கூடாது; பல்வேறு தொழிற்சாலைகளை கொண்டு வந்து அனைவருக்கும் வேலைவாய்ப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்பதே முதலமைச்சர் விஜய்யின் கனவு" என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் செங் கோட்டையன் கூறுகையில், "சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு பிறகு, ஈரோடு மாவட்டத்தில் இதுபோன்று பல முகாம்கள் நடத்தப்படும். இளைஞர்கள் வேலை தேடி அலைவதை காட்டிலும், இந்த முகாம்கள் மூலம் பயனடைந்து தங்கள் எதிர்காலத்தை பிரகாசமாக்கி கொள்ள வேண்டும். இலவசமாக செயல்படும் கே.ஏ.எஸ். அகாடமி பயிற்சி மையம் மூலம் 6 பேர் குரூப் 1 பணியிலும், கடந்த 4 ஆண்டுகளில் 76 பேர் குரூப்2 மற்றும் குரூப்4 தேர்வுகளிலும் வெற்றி பெற்றுள்ளனர்" என்று தெரிவித்தார்.



## ஊத்துக்கோட்டையில் அரிமா சங்கம் மற்றும்சென்னை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் 36வது இலவச கண் சிகிச்சை முகாம்

திருவள்ளூர், ஜூலை.27-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அரிமா (LIONS CLUB) சங்கம் மற்றும் சென்னை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 36வது இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது சுமார் 100க்கும் மேற்பட்ட மகள் கலந்து கொண்டு பரிசோதனை செய்துகொண்டனர் இம்முகாமை அரிமா சங்க நிர்வாகிகள் தலைவர் லயன்சிட்டிபாபு, செயலாளர் லயன்சரவணன், பொருளாலர் லயன்டி.ஆர்.சுரேஷ் மற்றுற் நிர்வாகிகள் லயன்நி.ரி.பழனி, வழக்கறிஞர்கள் வயன்திலீப்குமார், லயன்பாலசுப்பிரமணி, மற்றும் லயன் லய ன்தமிழ்ச்செல் வன்,லயன்நடராஜன், லயன் பாஸ்கர், லயன்வசந்த்குமார், லயன்கதிரவன் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்

## காவேரிப்பட்டினத்தில் ரெட் கிராஸ் சொசைட்டி சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம்





கிருஷ்ணகிரி, ஜூலை.27-

காவேரிப்பட்டினம் ரெட் கிராஸ் அலுவலகத்தில், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி காவேரிப்பட்டினம் துணைக் கிளை, கோவை அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து இலவச கண் பரிசோதனை முகாமை நடத்தின. முகாமிற்கு ரெட் கிராஸ் மாவட்ட செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். இதில் ரெட் கிராஸ் மாவட்ட பொருளாளர் மோகன், காவேரிப்பட்டினம் துணைக் கிளை நிர்வாகிகள் குமரன், சேஷகிரி, ஜெயபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு, கோவை அரவிந்த் கண் மருத்துவமனையின் மருத்துவர் டேனி பிரசாந்த் தலைமையிலான மருத்துவக் குழுவினர் இலவச கண் பரிசோதனை மேற்கொண்டனர். பரிசோதனையில் கண்புரை அறுவை சிகிச்சை தேவை என கண்டறியப்பட்டவர்கள் மேல்சிகிச்சைக்காக கோவை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு இலவசமாக அனுப்பி வைக்க ப்பட்ட னர்.இம் முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

## கூடலூர் வனக்கோட்டம் அறிவிப்பு

நீலகிரிகூடலூர், ஜூலை 27-

நீலகிரி மாவட்டம் கூடலூர் வனக்கோட்ட பகுதிகளான நாடுகாணி, கூடலூர் ,ஊசிமலை , ஓ வேலி பகுதிகளில் நீலக் குறிஞ்சி மலர்கள் பூத்துள்ளது. குறிஞ்சி மலர்கள் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பாதுகாக்க பட வேண்டிய முக்கிய தாவரங்களில் ஒன்று எனவே பூக்களை பறிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் மேலும் குறிஞ்சி மலர்கள் பூத்துள்ள பகுதிகளில் அதிக அளவில் யானைகள் நடமாட்டம் உள்ள நிலையில் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி பொதுமக்கள் யாரும் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது



## கிருஷ்ணகிரியில் சமூக நீதி விடுதிகள், நியாய விலைக் கடைகளில் அமைச்சர்ப. வெங்கடரமணன் ஆய்வு

கிருஷ்ணகிரி, ஜூலை.27-

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ப. வெங்கடரமணன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் , கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் மற்றும் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் இளையராஜா மற்றும் அரசு துறை அலுவலர்களுடன் இணைந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் சமூக நீதி விடுதிகள் மற்றும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பொதுமக்களுக்கு உணவுத் துறை மூலம் வழங்கப்படும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் தரம், இருப்பு, விநியோக முறை மற்றும் சேவைகளின் செயல்பாடு குறித்து விரிவாக ஆய்வு செய்து, அதிகாரிகளிடம் தேவையான விவரங்களை கேட்டறிந்தார்.மேலும், பொதுமக்களுக்கு தரமான அத்தியாவசியப் பொருட்கள் தாமதமின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், அரசு திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

## சிட்லபாக்கத்தில் தமிழ் செல்வம் சூப்பர் கப் மற்றும் பெரியார் பெருந்தொண்டர் இரத்தினசாமி-ஆதிலட்சுமி நினைவு கால்பந்து போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது





தாம்பரம், ஜூலை.27-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அடுத்த சிட்லபாக்கத்தில், தமிழ் செல்வம் அறக்கட்டளை மற்றும் சிவா ஸ்போர்ட்ஸ் அப் மற்றும் தமிழ் செல்வம் கால்பந்து கழகம் இணைந்து, இளம் கால்பந்து வீரர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில் "தமிழ் செல்வம் சூப்பர் கப்" மற்றும் பெரியார் பெருந்தொண்டர் இரத்தினசாமி-ஆதிலட்சுமி முதல் ஆண்டு நினைவு கால்பந்து போட்டி ஆகியவற்றை தமிழ்செல்வம் மற்றும் சிவசாமி ஆகியோர் தலைமையில் சிறப்பாக நடத்தினர். இப்போட்டிகள் மூலம் பள்ளி மாணவர்களிடையே விளையாட்டு ஆர்வம், ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் திறமைகளை வளர்க்கும் வகையில் சிறந்த வாய்ப்பு உருவாக்கப்பட்டது.தமிழ் செல்வம் சூப்பர் கப் (U-14) போட்டிகள் சிட்லபாக்கம் சிவா ஸ்போர்ட்ஸ் ஹப் மைதானத்தில் நடைபெற்றது. மேலும், ரத்தினசாமி–ஆதிலட்சுமி முதல் ஆண்டு நினைவு கால்பந்து போட்டி 25.07.2026 அன்று நடைபெற்றது.போட்டிகள் U-10 (2016 - 2017) மற்றும் U-12 (2014 - 2015) ஆகிய பிரிவுகளில் 6A-Side (6+3) முறையில் நடைபெற்றன. நிறைவு விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக ராவணன் சாமி, டைமன் ராஜா வெள்ளையன், தனசேகரன், ஜான் மோரிஸ், முத்தையா, ரவிச்சந்திரன், வழக்கறிஞர் மணிமாறன், கலாநிதி, ஸ்ரீராம் மற்றும் மார்க்கெட் ஞானப்பால் ஆகியோர் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற அணிகளுக்கு சாம்பியன் கோப்பை, ரன்னர்அப் கோப்பை, பதக்கங்கள் மற்றும் சிறந்த வீரர், சிறந்த கோல் கீப்பர் ஆகியோருக்கான சிறப்பு விருதுகளை வழங்கி பாராட்டினர்.இப்போட்டியில் கால்பந்து குழு நிர்வாகிகள் சரத், கார்த்திக், ராஜன், பயிற்சியாளர்கள் கிஷோர், விஜயன், கேபிரேல், நடுவர்கள் பாஷா, லோகு மற்றும் ஏராளமான கால்பந்து வீரர்கள், பெற்றோர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு போட்டிகளை உற்சாகமாகக் கண்டு ரசித்தனர்.

## மாணவர்களுக்கு தேவையற்ற நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்: எஸ்சி,எஸ்டி பணியாளர் சங்கம் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.27-

மாணவர்களுக்கு தேவையற்ற நீட் தேர்வை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று எஸ்சி,எஸ்டி பணியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.Historyதமிழ்நாடு அரசு தொழில் நுட்பக்கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி,எஸ்.டி பணியாளர் நலச்சங்க மாநில பொதுச்செயலாளர் டேவிட் மகிமைதாஸ் வெளியிட்ட அறிக்கை:நீட் தேர்வு குளறுபடிகள், நீட் தேர்வால் மாணவர்களின் மரணம் உள்ளிட்ட பல காரணங்களை எதிர்த்து டெல்லியில் ஆரம்பித்த மாணவர்களின் போராட்டம் இந்தியா முழுமைக்கும் பரவியதை அடுத்து, மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்துள்ளார் . இளைஞர்களுடைய தன்னெழுச்சி போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. நீட் தேர்வுக்கான எதிர்ப்பு போராட்டத்திற்கு மத்திய அரசு அடிபணிந்து உள்ளது.10 நாட்களாக டெல்லியில் நடந்து வரும் பிரச்சனைகள் காவல் துறையினுடைய தடியடிகள் உயிரிழப்புகள் நீட் தேர்வு முறைகேடுகளுக்கு தார்மீக பொறுப்பேற்று மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்திருப்பதை தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி, எஸ்டி பணியாளர் நலச்சங்கம் வரவேற்கிறது. மாணவர்களுக்கு தேவையற்ற நீட் தேர்வை ரத்து செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்



தேனி, ஜூலை.27-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## செங்குன்றம் ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா

மாதவரம், ஜூலை.27-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சி ராஜாஜி தெருவில் அமைந்துள்ள நாகவள்ளி முத்துமாரியம்மன் கோவிலில், 34ம் ஆண்டு ஆடித் திருவிழா, கோவில் நிர் வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவி யங்களால் அபிஷேகம் செய்து வெள்ளி கவசம் மற்றும் வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மனுக்கு கூழ்வார்த்தல் போன்ற சிறப்பு பூஜைகள் நடை பெற்றது.மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு கோவில் மற்றும் உபய தாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். இவ்விழாவிற்கு கோவில் பொறுப்பாளர்கள் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தீபம் ஏற்றிவைத்தும்,பொங்கல் வைத்தும் அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் மங்கள பொருட்கள் பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதூர்நாடு ஊராட்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

## திருமணம் குறித்து கலகலப்பாக பதிலளித்த துஷாரா விஜயன்‘ராயன்’ தேசிய விருது கேள்விக்கும் மனம் திறந்த பதில்!





தாம்பரம், ஜூலை.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த செம்பாக்கத்தில் அமைந்துள்ள தனியார் நகைக்கடையின் புதிய கிளை திறப்பு விழாவில் நடிகை துஷாரா விஜயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி கடையை திறந்து வைத்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், தற்போது உருவாகி வரும் 'சார்பட்டா 2' திரைப்படம், முதல் பாகத்தை விட ரசிகர்களை அதிகம் கவரும் வகையில் இருக்கும் என்ற நம்பிக்கையை தெரிவித்தார்.மேலும், நல்ல கதை மற்றும் வலுவான கதாபாத்திரம் அமைந்தால் வெப் சீரிஸ்களிலும் நடிக்கத் தயாராக இருப்பதாக கூறினார்.தங்கம் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, "தங்கம் என்பது சிறந்த முதலீடு" என்ற தனது கருத்தை பகிர்ந்தார்.

தொடர்ந்து, 'ராயன்' திரைப்படத்திற்காக தனக்கு தேசிய விருது கிடைக்காதது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, "அந்தப் படத்திற்கு தேசிய விருது கிடைத்திருக்கிறது. அது முழு படக்குழுவிற்கும் கிடைத்த விருதாகவே நான் கருதுகிறேன்" என்று பெருந்தன்மையுடன் பதிலளித்தார்.

மேலும், "உங்களுடைய திருமணம் எப்போது?" என்று செய்தியாளர்கள் கேட்டபோது, சிரித்தபடியே "திருமணமா... டாட்டா... பை பை!" என்று நகைச்சுவையாக பதிலளித்து அங்கிருந்தவர்களை சிரிக்க வைத்தார்.தொடர்ந்து, டெல்லியில் நடைபெற்று வரும் போராட்டம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டபோது, "இது நகைக்கடை திறப்பு விழா. அதைப் பற்றிய கேள்விகளை மட்டும் கேளுங்கள்" என்று மரியாதையுடன் கூறி அந்தக் கேள்வியை நயமாகத் தவிர்த்தார். நிகழ்ச்சி முழுவதும் துஷாரா விஜயனின் இயல்பான பேச்சும், கலகலப்பான பதில்களும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.

# பல்வேறு துறைகளின் சார்பில் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 புதிய கட்டடங்களை திறந்து வைத்து, 7873 பயனாளிகளுக்கு ரூ. 57.77 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளைதமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் வழங்கினார்

தேனி வீரபாண்டி, ஜூலை.27-

தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 புதிய கட்டடங்களை திறந்து வைத்து, 7873 பயனாளிகளுக்கு ரூ.57.77 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறைஅமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார். மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், முன்னிலையில் வழங்கினார். இவ்விழாவில் தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் பேசுகையில், தேனி மாவட்டம் இயற்கை எழில்மிகு மாவட்டமாகும். கடந்த

70 ஆண்டுகளுக்கும் மேலாக தூர்வாரப்படாமல் உள்ள வைகை அணையை தூர்வாருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் வளர்ச்சிப்பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும், மக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றவும் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் தேனி மாவட்டத்தில்தான் 38 சதவீதம் வனப்பகுதி உள்ளது. பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாத வகையில் இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அழியக்கூடிய நிலையில் உள்ள பாரம்பரியத் தொழில்களைப் பாதுகாத்து, மேம்படுத்தப்படும். பொதுமக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் உடனடியாக செய்து கொடுத்து,தேனி மாவட்டத்தை வளர்ச்சி மிகுந்த மாவட்டமாக உருவாக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இன்றைய தினம் நடைபெறும் அரசு விழாவில் 7873 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தேனி ஊராட்சி ஒன்றியம், கோவிந்த நகரத்தில் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், அழகாபுரி ஊராட்சி கரிச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியம் கண்டமனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ. 36.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், மந்திசுனை மூலக்கடை ஊராட்சி ஆலந்தளிர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், சில்வார்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ. 36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், சில்வார்பட்டி



ஊராட்சியில் ரூ. 31.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம், நல்லகருப்பன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், எண்டப்புளி ஊராட்சி காட்டுநாயக்கர் தெருவில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய சமுதாயக்கூடக் கட்டடம், எண்டப்புளி ஊராட்சியில் ரூ.13.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாயவிலைக்கடை கட்டடம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், நாகலாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ. 36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் போடிநாயக்கனூரில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம், கூட்டுறவுத்துறை சார்பில் தேனி ஊராட்சி ஒன்றியம், வெங்கடாசலபுரம் ஊராட்சியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்கடன் சங்க அலுவலகக் கட்டடம், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் உத்தமபாளையம் வட்டம், பண்ணைப்புரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ. 94.24 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.127.71 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறை, ஆய்வகம் மற்றும் கழிப்பறைக் கட்டடம், ஆண்டிப்பட்டி வட்டம், தங்கம்மாள்புரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.49.48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் என மொத்தம் ரூ.7,44,45,000/ மதிப்பீட்டில் முடிவுற்ற 15 புதிய கட்டடங்களை பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, பெரியகுளம், தேனி (நகர்ப்புறம்), தேனி (ஊரகம்), போடிநாயக்கனூர் (நகர்ப்புறம்) மற்றும் சின்னமனூர் (நகர்ப்புறம்) ஆகியப் பகுதிகளில் ரூ.55,55,000/ மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள வட்டார அளவிலான ஓரிட சேவை மையத்தினை மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.4,62,500/ இயற்கை மரண உதவி தொகைகளையும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.10,000/ திருமண உதவித்தொகையினையும், 309 பயனாளிகளுக்கு ரூ.3,66,58,000/ மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களையும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ.16,46,500/ மதிப்பீட்டில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய பயணியர் வாகனத்தினையும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் சுய தொழில் தொடங்குவதற்கான மானியத்தொகை மற்றும் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சுயதொழில் தொடங்குவதற்கான மானியத்தொகையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.17,562/ மதிப்பிலான விலையில்லா தேய்ப்புப் பெட்டிகளையும், கிறுத்துவ மகளிர் உதவும் சங்கம் மூலம் 160 பயனாளிகளுக்கு ரூ.19,00,000/ மதிப்பீட்டில் சிறு தொழில் தொடங்குவதற்கான மானியத் தொகைகளையும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் 38 பயனாளிகளுக்கு ரூ.87,87,100/ மதிப்பிலான அடுக்குமாடி குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.15,00,000/ மதிப்பிலான முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.1,63,074/ மதிப்பீட்டில் நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கான பணி ஆணையினையும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.75,000/ மதிப்பீட்டில் கல்தூண் பந்தல் அமைப்பதற்கான ஆணை மற்றும் ரூ.30,000/ மதிப்பிலான மரக்கன்றுகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் போர்வெல் மற்றும் மின்மோட்டார் அமைப்பதற்கு 3 பயனாளிகளுக்கு ரூ.4,94,000/ மதிப்பீட்டில் மத்திய காலக்கடன் மற்றும் கால்நடை பராமரிப்புக் கடனுதவிகளையும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 4,716 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.52,42,12,000/ மதிப்பிலான கடனுதவிகளையும் சமூகநீதித்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.20,070/மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.93,750/ மதிப்பிலான பட்டுப்புழு வளர்ப்பு தளவாடப் பொருட்களையும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ.12,000/ மதிப்பீட்டில் மூன்றாம்பாலினத்தவருக்கான மாதாந்திரஉதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.4,00,000/ மதிப்பீட்டில் புதிய மீன் விற்பனை அங்காடி மையம் அமைப்பதற்கான மானியத்தொகையினையும், 1 பயனாளிக்கு ரூ.12,00,000/ மதிப்பீட்டில் உயிருள்ள மீன்கள் விற்பனை செய்யும்வாகனம் வாங்குவதற்கான மானியத்தொகையினையும், உணவுப்பொருள் வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 2,600 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும் என மொத்தம் 7,873 பயனாளிகளுக்கு ரூ.57,76,81,556/மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் வழங்கினார். பின்னர், கூட்டுறவுத்துறையின் சார்பில் மலைக்கிராம மக்கள் விரைவாகவும், எளிதாகவும் அத்தியாவசியப் பொருட்களைப் பொருட்களை பெற்றும் பயன்பெறும் வகையில், போடிநாயக்கனூர் வட்டத்திலுள்ள 34 மலைக் கிராமங்களுக்கு ஏற்கனவே 20 நகரும் நியாய விலைக்கடைகள் மூல மாககுடிமைப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போது ஆண்டிபட்டி வட்டத்தில் உள் ள 24 மலைக்கிராம மக்கள் பயன்பெறும் வகையில் 8 நகரும் நியாயவிலைக்கடைகளின் சேவைகளை தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவங்கி வைத்தார்.

முன்னதாக, இந்திய அரசின் "கீர்த்தி சக்ரா" விருது பெற்ற காமயகவுண்டன்பட்டியைச் சேர்ந்த இராணுவ வீரர் லான்ஸ் நாயக்அ.மீனாட்சி சுந்தரம் விலையில்லா வீட்டுமனைப் பட்டாவை வழங்கி,ப யங்கரவாதிகளுக்கு எதிரான அவரின் வீர தீரச் செயலுக்கு தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுகளைத் தெரிவித்தார்.இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் க.சபரிஜங்கரன் (பெரியகுளம்), பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா (கம்பம்), மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) வீராச்சாமி, வருவ ாய்கோட்டாட்சியர்கள்.சையது முகை தீன் இப்ராஹிம் (உத்தமபாளையம்), கவிதா (பெரியகுளம்) (பொ) மற்றும் பல்வேறு துறை சார்ந்த மாவட்ட நிலையிலான அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## டாஸ்மாக் கடையில் இருந்து 100 மீட்டர் தூரம் வரை பார்கள் இயங்கலாம் என விதிகளைத் திருத்தி தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை, ஜூலை.27-

டாஸ்மாக் கடையில் இருந்து 100 மீட்டர் தூரம் வரை பார்கள் இயங்கலாம் என விதிகளைத் திருத்தி தமிழ்நாடு அரசு உத்தரவு அளித்துள்ளது. இதன்படி, டாஸ்மாக் கடைகளை ஒட்டியோ அல்லது அக் கடைகளிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள்ளோ பார்களை அமைக்க அனுமதிக்கப்படுகிறது. முன்னதாக, டாஸ்மாக் மதுபானக் கடைகளுக்குள்ளேயே அல்லது அவற்றை ஒட்டியே பார்கள் செயல்பட விதிகள் அனுமதித்தி ருந்தன தமிழகத்தில் டாஸ்மாக் மதுக்கடைகளுடன் இணைந்து இயங்கும் பார்களைத் தொடங்குவது மற்றும் உரிமம் வழங்குவது தொடர்பாகப் புதிய தளர்வுகளையும் விதிமுறை மாற்றங்களையும் டாஸ்மாக் நிர்வாகம் அறிவித்துள்ளது. இதுவரை டாஸ்மாக் மதுக்கடையை ஒட்டியே (இணைந்தே) பார் தொடங்க அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில், இனி மதுக்கடையில் இருந்து




100 மீட்டர் சுற்றளவுக்குள் பார்களைத் அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட உள்ளது.

பார் அமைப்பதற்கான குறைந்தபட்ச இடத்தின் பரப்பளவு '15 சதுர மீட்டரில் இருந்து 20 சதுர மீட்டராக' உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பார்களில் கூடுதல் இடவசதி மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. புதிய டெண்டர் மற்றும் தளர்வு விதிமுறைகளின் மூலம் குறிப்பிட்ட நபர்கள் அல்லது குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே தொடர்ந்து பார் நடத்தும் பழைய நடைமுறை மாற்றப்பட்டு, புதிய நபர்களுக்கும் ஏலம், டெண்டரில் பங்கேற்க வாய்ப்பு உருவாகும் எனக் எதிர்பார்க்கப்படுகிறது. டாஸ்மாக் பார்களுக்கான பழைய உரிமக் காலம் அண்மையில் நிறைவடைந்த நிலையில், புதிய டெண்டர் விதிமுறைகளை இறுதி செய்யும் வரை தற்காலிகமாக பார்களின் இயக்கம் நீட்டிக்கப்பட்டிருந்தது. பார் அமைப்பதற்கான இட அமைப்பில் தளர்வுகள் தரப்பட்டாலும், பார்களில் பீடிசிகரெட் விற்பனைக்கான தடை, சிற்றுண்டி மற்றும் குடிநீரை அதிக விலைக்கு விற்கக் கூடாது போன்ற இதர கட்டுப்பாடுகள் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன

## சென்னை அருகே வானகரம் மற்றும் சூரப்பட்டு சுங்கச்சாவடியில் நள்ளிரவு முதல் சுங்கக் கட்டணம் உயர்வு

சென்னை, ஜூலை.27-

சென்னை அருகே வானகரம் மற்றும் ஆகிய சூரப்பட்டு சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு முதல் ரூ.5 முதல் ரூ.15 வரை சுங்க கட்டணம் உயர்கிறது. ஒரே நாளில் வந்து செல்லும் இலகு ரக வாகனங்களுக்கான சுங்கக் கட்டணம் ரூ.135ஆக உயர்கிறது. இதனால் வாகன ஓட்டிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## காவல்துறை உயர் அதிகாரிகளின் செயல் உள்நோக்கம் கொண்டது: சிறப்பு எஸ்ஐ சஸ்பெண்ட் வழக்கில் உயர் நீதிமன்றம் அதிருப்தி

சென்னை, ஜூலை.27-

குற்றச்சம்பவமே நடக்காத நிலையில் அதில் ஈடுபட்டதாக சிறப்பு உதவி ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதில், காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு உள்நோக்கம் இருப்பதாக அதிருப்தி தெரிவித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், சஸ்பெண்ட் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம் திம்மாவரம் பகுதியை சேர்ந்த வாசுகி மற்றும் அப்பகுதியை சேர்ந்த காஜா மொய்தீன் இடையேயான உரிமையியல் பிரச்னை குறித்து செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் வாசுகி புகார் அளித்துள்ளார். அதன்பேரில், காஜா மொய்தீன், அவரது மனைவி, மகள் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. காஜா மொய்தீன் அளித்த எதிர் புகாரின் அடிப்படையில் வாசுகி, அவரது உறவினரான செங்கல்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றும் ஜி.ராமஜெயத்தின் மனைவி உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் அடிப்படையில், சிறப்பு எஸ்.ஐ. ஜி.ராமஜெயம் குற்றச்செயலில்




ஈடுபட்டதாக கூறி அவரை பணியிடை நீக்கம் செய்து செங்கல்பட்டு மாவட்ட எஸ்.பி. கடந்த மே மாதம் உத்தரவு பிறப்பித்தார். இதையடுத்து, சஸ்பெண்ட் உத்தரவை ரத்துசெய்ய கோரி ராமஜெயம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு, நீதிபதி பி.டி.ஆஷா முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் சி.சிவக்குமார் ஆஜராகி, மனுதாரர் எந்த குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் அவர் பணியில் இருந்துள்ளார். புகார் அளித்த இரு தரப்புக்கும் இடையே சமரசம் ஏற்பட்டதன் அடிப்படையில், இரு தரப்பினரும் மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுள்ளனர். இவற்றின் அடிப்படையில் மனுதாரர் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்ற நீதிபதி பி.டி.ஆஷா, தகராறு சம்பவமே நடைபெறவில்லை என்று புகார்தாரர்களே அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் அளித்த நிலையில், பணியிடை நீக்க உத்தரவை ரத்து செய்யாத காவல்துறை அதிகாரிகளின் நடவடிக்கை உள்நோக்கம் கொண்டதாக தெரிகிறது. எனவே, சிறப்பு எஸ்.ஐ. ராமஜெயத்தின் பணியிடை நீக்க உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மனுதாரரை செங்கல்பட்டு மாவட்ட எஸ்பி உடனடியாகப் பணியில் சேர்க்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

## பெண்ணிடம் ரூ.10.7 லட்சம் வாங்கி மோசடி செய்த கார் டிரைவர் கைது

பெரம்பூர், ஜூலை.27-

சென்னை கொளத்தூர் பூம்புகார் நகர் பகுதியைச் சேர்ந்தவர் ஷாலினி (34). இவரது கணவர் பாஸ்கரன், தனியார் மருத்துவமனையில் வேலை செய்து வருகிறார். இவர்களுக்கு ஒரு மகன் உள்ளார். கடந்த 2024ம் ஆண்டு கொளத்தூர் தென்பழனி நகரில் உள்ள ஒரு வீட்டை விற்பது சம்பந்தமாக கொளத்தூர் முருகன் நகர் 5வது தெருவை சேர்ந்த கார் டிரைவர் தினகரன் (26) என்பவர் ஷாலினி குடும்பத்திற்கு பழக்கமாகி நன்றாக பழகி வந்துள்ளார்இந்நிலையில் தினகரன் தனது குடும்ப தேவைக்காக 12 லட்சம் ரூபாய் அவசரமாக தேவைப்படுவதாக கூறியதால், கடந்த 2024ம் ஆண்டு ஜூன் மாதம் 11 சவரன் தங்க நகையை அடமானம் வைத்து ஷாலினி ரூ.6.50 லட்சம் கொடுத்துள்ளார். மேலும் அதே மாதத்தில் மேலும் ரூ.4.2 லட்சம் கொடுத்துள்ளார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட தினகரன் மூன்று மாதத்தில் அதை திருப்பி கொடுத்துவிடுவதாக தெரிவித்தார்.ஆனால் இதுவரை பணத்தை திருப்பி தராமல் தினகரன் ஏமாற்றி வந்துள்ளார். இதனால் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ஷாலினி பெரவள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.அதன்பேரில் பெரவள்ளூர் குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து நேற்று முன்தினம் தினகரனை கைது செய்துசிறையில் அடைத்தனர்



## தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் 7 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூலை.27-

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் 7 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. மேலும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் மிதமான மழை பெய்யக் கூடும். சென்னையில் இன்றும் நாளையும் நகரின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# நெய் வியாபாரி கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்பு சிவகங்கையில் பரபரப்பு; கொலையா? போலீசார் தீவிர விசாரணை





சிவகங்கை, ஜூலை.27-

சிவகங்கை மாவட்டம் முளைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த நெய் வியாபாரி ரஜினி, சிவகங்கை அண்ணாமலை நகர் மயானம் பின்புறம் உள்ள சுற்றுவட்டச் சாலை அருகேயுள்ள காட்டுப்பகுதியில் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் இன்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டார்.நேற்று இரவு வீட்டை விட்டு வெளியே சென்ற ரஜினி, நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால் குடும்பத்தினர் அவரை பல்வேறு இடங்களில் தேடியுள்ளனர். இந்நிலையில், நேற்று அதிகாலை காட்டுப்பகுதியில் அவரது உடல் கிடப்பதை அப்பகுதியினர் கண்டு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த சிவகங்கை நகர் போலீசார், உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.ரஜினி கொலை செய்யப்பட்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? யார், எதற்காக இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்பது குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார், பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருப்பத்தூர் அமெச்சூர் கபடி கழகம் சார்பில் திருப்பத்தூர் மாவட்ட கபடி செயலாளர் தேர்வு குறித்து கபடி போட்டி ஜோலார்பேட்டை சிறுவிளையாட்டு அரங்கில் நடைபெற்றது



இந்த செயலில் ஈடுபடுகிறார் எனக்கூறி கபடி குழு வீரர்கள் இன்று நடைபெற இருந்த போட்டியை நிறுத்தினர்.

இது குறித்து செய்தியாளர்களை சந்தித்த கபடி குழு வீரர்கள்.

திருப்பத்தூர், ஜூலை.27-

தற்போதைய திருப்பத்தூர் மாவட்ட கபடி செயலாளராக உள்ள மதன் என்பவர் மீண்டும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் மேஸ்திரி வேலை செய்யும் நபர்கள் மற்றும் வயதான பழைய கபடி வீரர்களை அழைத்து வந்து பனியன் போட்டு தற்போது விளையாட வைக்கிறார் என குற்றக்காட்டு எழுந்த நிலையில் இன்று விளையாடும் கபடி குழுக்களில் உள்ள வீரர்கள் ஓட்டு போட்டால் தான் மீண்டும் வெற்றி பெற முடியும் என்பதற்காக திருப்பத்தூர் மாவட்ட கபடி செயலாளர் மதன் என்பவர் தனக்கென பிகே ஸ்போர்ட்ஸ் பவுண்டேஷன் வைத்துள்ளார். அதில் இவரால் பயிற்சி அளிக்கப்படும் விளையாட்டு வீரர்களுக்கு மட்டும் முன்னுரிமை அளித்து வருகிறார். அது மட்டுமல்லாமல் கபடி விளையாட விட்டாலும் நேரடியாக பைனலில் விளையாட வைக்கிறார். மேலும் இதற்கு முன்பு நடைபெற்ற போட்டிகளில் எல்லாம் குறைந்த பட்சம் 20 அல்லது 30 கபடி குழுக்கள் மட்டுமே பங்கேற்கும் திருப்பத்தூர் மாவட்டத்தை அலசி பார்த்தாலே குறைந்தபட்சம் 100 டீம் கூட வராது. ஆனால் தற்போது திருப்பத்தூர் மாவட்ட கபடி குழு செயலாளர் தேர்வுக்கான போட்டி என்பதால் மதன் என்பவர் தன்னுடைய சுயநலத்திற்காகவும் மேலும் தன்னை மீண்டும் வெற்றி பெற செய்வார்கள் என்ற நம்பிக்கையில் போலியாக 230 டீமை ஆன்லைனில் பதிவு செய்து இன்று விளையாட இறக்கி உள்ளார். அதுமட்டுமல்லாமல் மேஸ்திரி வேலை செய்யும் நபரை அழைத்து வந்து பனியன் போட்டும் விளையாட வைக்க முற்படுகிறார். அதன் காரணமாக உண்மையான கபடி வீரர்கள் இன்று நடைபெற இருந்த கபடி போட்டியை நிறுத்தினோம் என ஆதங்கம் தெரிவித்தனர் மேலும் செயலாளரை மாற்ற வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்ஞ்

# சென்னைக்கு குடிநீர் அனுப்புவதில் சிக்கல்; வீராணம் ஏரி ஷட்டர்களை சேதப்படுத்தும் மர்ம நபர்கள்

## அதிகாரிகள் தீவிர ரோந்து





சென்னை, ஜூலை.27-

வீராணம் ஏரி ஷட்டர்களை மர்மநபர்கள் சேதப்படுத்தியதால் தண்ணீர் வீணாக வெளியேறியது. இதையடுத்து போலீசாருடன் அதிகாரிகள் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அடுத்துள்ள வீராணம் ஏரியின் ராதா மதகில் உள்ள ஷட்டர்களை மர்ம நபர்கள் உடைத்து சேதப்படுத்துவதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, பொதுப்பணித்துறை (நீர்வளத்துறை) அதிகாரிகள் மற்றும் புத்தூர் காவல் நிலைய போலீசார் இணைந்து இரவு நேரங்களில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வீராணம் ஏரியில் இருந்து சென்னைக்கு குடிநீர் அனுப்பப்பட்டு வரும் நிலையில், சில மர்ம நபர்கள் ஷட்டர்களை உடைத்து சேதப்படுத்தி தண்ணீரை வீணாக வெளியேற்றி வருவதாக புகார்கள் எழுந்துள்ளன. இதன் காரணமாக சென்னைக்கு குடிநீர் அனுப்பும் பணியில் பாதிப்பு ஏற்படும் சூழல் ஏற்பட்டது.இதையடுத்து, நீர்வளத்துறை உதவி பொறியாளர் படைக்காத்தான் தலைமையில் நீர்வளத்துறை பணியாளர்கள் மற்றும் புத்தூர் போலீசார் இணைந்து ராதா மதகு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரவு நேர தீவிர ரோந்து மற்றும் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், சந்தேகத்திற்கிடமான நபர்கள் யாரேனும் தென்பட்டாலோ அல்லது ஷட்டர்களை சேதப்படுத்தும் முயற்சிகள் குறித்து தகவல் கிடைத்தாலோ உடனடியாக காவல்துறை மற்றும் நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்குமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பள்ளிகளின் பாலினமன்ற ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் நிகழ்ச்சி





சென்னை, ஜூலை.27-

பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் சார்பில் பள்ளிகளின் பாலினமன்ற ஆசிரிய ர்களுக்கான உளவியல் வழிகாட்டுதல் நிகழ்ச்சியை நேற்று சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர் தொடங்கி வைத்தார். சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன், உத்தரவின் பேரில் இணை ஆணையர் கற்பகம் வழிகாட்டுதலின் படியும் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் பாலினமன்ற ஆசிரியர்களுக்கான உளவியல் வழிகாட்டுதல் நிகழ்ச்சி ரிப்பன் கட்டிட வளாகக் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது.இந்நிகழ்ச்சியின் நோக்கமானது குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தினரின் உளவியல் குறித்த ஆசிரியர்களின் புரிதலை வலுப்படுத்துவதையும், மாணவர்களின் உணர்வுசார் நல்வாழ்வு மற்றும் நேர்மறையான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான நடைமுறை அணுகுமுறைகளை அவர்களுக்கு வழங்குவதுமாகும். இந்நிகழ்ச்சியை பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வி அலுவலர் தொடங்கி வைத்தார். குழந்தைகளின் தன்னம்பிக்கை, நடத்தை மற்றும் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஆசிரியர்களின் முக்கியப் பங்கை எடுத்துரைத்தார்.

நேர்மறை வலுவூட்டல், ஊக்கம் மற்றும் பரிவுள்ள வழிகாட்டுதல் ஆகியவை ஒரு குழந்தையின் சுயமரியாதையை மாற்றி, அவர்களின் திறனை உணர்த்திட உதவும். சுவிட்சர்லாந்தின் சூரிச்சை சேர்ந்த சர்வதேச பகுப்பாய்வு உளவியலாளரும், சூரிச் ஐஏஸ்ஏபின் மெட்ரிகுலேட்டட் தணிக்கையாளருமான டாக்டர் அக்ஷயா ராஜா சிறப்புரையாற்றினார். ஒவ்வொரு குழந்தையின் நடத்தையும் ஒரு வகையான தகவல் தொடர்பு என்பதை கூறினார். மேலும், குழந்தைகளை திருத்தும் முயற்சியில் ஈடுபடுவதற்கு முன்பு அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் முக்கியத்துவத்தையும், குழந்தைகளின் பலத்தினை அங்கீகரிக்கவும், அவர்களின் முயற்சிகளைப் பாராட்டவும், உணர்வு ரீதியாக மீள்திறன் கொண்ட மற்றும் தன்னம்பிக்கையான தனிநபர்களை வளர்க்க நேர்மறையான வழிகாட்டுதலைப் பயன்படுத்தவும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.மேலும், பாலினமன்ற ஆசிரியர்களுக்கு வகுப்பறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும், நடத்தை சார்ந்த கவலைகள், உணர்வு, நல்வாழ்வு, சக வயது உறவுகள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதற்கான பயனுள்ள அணுகுமுறைகள் குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.



# 36.64 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் எரித்து அழிப்பு: மாநகராட்சி தகவல்

சென்னை, ஜூலை.27-

சென்னையில் 105 இடங்களிலிருந்து 36.64 மெட்ரிக் டன் பழைய சோபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது. இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்ட அறிக்கை: பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பெற்று அகற்றும் பணி 2025ம் ஆண்டு அக்டோபர் 11ம் தேதி அன்று தொடங்கி நடைபெற்று வருகிறதுஅதனடிப்படையில் நேற்று மட்டும் 105 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில், 36.64 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது. இதற்காக 43 எண்ணிக்கையிலான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே பெருநகர சென்னை மாநகராட்சியின் “நம்ம சென்னை” செயலியில் பதிவு செய்ய வேண்டும், அல்லது பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும், அல்லது பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.இதனடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள். இச்சேவையினை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தெரு நாய்கள் கடித்து மான்கள் உயிரிழப்பு





சென்னை, ஜூலை.27-

மீஞ்சூர் சுற்றுப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் உள்ள வனப்பகுதிகளில் புள்ளிமான்கள் அதிக அளவில் உள்ளன. அவ்வப்போது இரைத்தேடியும் தண்ணீர் தேடியும் வழி தவறி ஊருக்குள் வந்து பாதிப்பை சந்தித்து வருகின்றன. மீஞ்சூர் அருகே வெள்ளம்பாக்கம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரை தேடி வழி தவறி ஊருக்குள் வந்த புள்ளிமான் ஒன்றை தெரு நாய்கள் துரத்தி கடித்துக் குதறியதில் புள்ளிமான் பரிதாபமாக உயிரிழந்தது.இதேபோல வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்டச் சாலையில் இரைத்தேடி வழி தவறி சாலையைக் கடந்த போது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் சினைமான் ஒன்று பலத்த காயம் அடைந்தது. அதேபோல் மவுத்தும்பேடு கிராமத்தில் நாய்கள் குதறியதில் மான் பரிதாபமாக உயிர் பிரிந்தது.இதுகுறித்து பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த வனத்துறை அதிகாரிகள் காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த சினைமானை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கும், நாய்கள் கடித்து குதறியதில் உயிரிழந்த மானின் சடலத்தை கைப்பற்றி சென்றனர். அண்மையில் மீஞ்சூர் நந்தியம்பாக்கம் ரயில் நிலையம் அருகே ரயில் மோதி 2 புள்ளிமான்கள் உயிரிழந்தன. புள்ளிமான்களின் உயிரிழப்பை தவிர்த்திடும் வகையில் வனத்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# திரையரங்கிற்கு படம் பார்க்க வந்தபோது வயதான பாதுகாவலரை சரமாரி தாக்கிய பெண்:வீடியோ வைரல்

## போலீசார் விசாரணை



தாம்பரம், ஜூலை.27-

திரையரங்கிற்கு படம் பார்க்க வந்த பெண் ஒருவர் வயதான பாதுகாவலரை கடுமையாக தாக்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலான நிலையில், போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேற்கு தாம்பரம், ராஜாஜி சாலையில் உள்ள நேஷனல் திரையரங்கில் ஜனநாயகன் படம் திரையிடப்பட்டுள்ளது. இந்த படத்தைக் காண நேற்று முன்தினம் காரில் ஒரு குடும்பத்தினர் வந்துள்ளனர். திரையரங்க வளாகத்திற்குள் வந்தபோது காரை முறையாக நிறுத்தும்படி திரையரங்க பாதுகாவலர் அறிவுறுத்தியுள்ளார். அப்போது காரில் இருந்த குடும்பத்தினர் திரையரங்க பாதுகாவலருடன் வாய் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

பின்னர் படம் முடிந்து வீட்டிற்கு செல்லும் போது திரையரங்கு வளாகத்தில் இருந்து குடும்பத்தினரின் கார் வெளியே சென்றுள்ளது. அதே நேரம் திரையரங்கில் மற்றொரு காட்சியை காண்பதற்காக பொதுமக்கள் வந்துள்ளனர். அப்போது திரையரங்கின் வெளியே இருந்து உள்ளே கார் ஒன்று நுழைந்ததால் படத்தை பார்த்து முடித்துவிட்டு வெளியே காரில் சென்ற குடும்பத்தினரின் காரை திரையரங்கு பாதுகாவலர் நிறுத்தி வெளியே இருந்து வரும் கார் உள்ளே சென்றவுடன் அவர்களை வெளியே செல்லும்படி அறிவுறுத்தியுள்ளார். அப்போது காரில் இருந்த பெண் ஆத்திரமடைந்து கீழே இறங்கி வந்து வயதான பாதுகாவலரை சட்டையை பிடித்து கிழித்து கன்னத்தில் கடுமையாக தாக்கியுள்ளார். பின்னர் அங்கிருந்த மற்ற பாதுகாவலர்கள் மற்றும் பொதுமக்கள் அவரை தடுத்து அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளனர். இந்த சம்பவத்தை திரையரங்கிற்கு வந்த நபர் ஒருவர் தனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானதை தொடர்ந்து தாம்பரம் போலீசார் இதுகுறித்து பாதிக்கப்பட்ட பாதுகாவலரிடம் இருந்து புகார் பெற்று விசாரணை நடத்தி வருகின்றனர். வயதானவர் என்றும் பாராமல் வீண் தகராறு செய்து முதியவரை கடுமையாக தாக்கிய பெண் மீது உடனடி நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்கள் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோவை கோனியம்மன் கோயிலில் உண்டியல் காணிக்கை திருட்டு புகாரில் 8 பேர் சஸ்பெண்ட்!

கோவை, ஜூலை.27-

கோவை கோனியம்மன் கோயிலில் உண்டியல் காணிக்கை திருட்டு புகாரில் 8 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். கடந்த 15ம் தேதி கோனியம்மன் கோயில் உண்டியல் காணிக்கை திருட்டு புகாரில் 4 பேர் கைதாகினர். இதையடுத்து கைது செய்யப்பட்ட 4 ஊழியர்கள், திருட்டு குறித்து அலட்சியமாக இருந்ததாக கோயில் ஊழியர்கள், அதிகாரிகளை கூண்டோடு பணியிடைநீக்கம் செய்து அமைச்சர் ரமேஷ் ஆணையிட்டுள்ளார்






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161